செ.வெ.எண். 32 நாள்: 15.08.2019

**73 -வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**

**தொடர்ந்து காவல் துறை அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்டார்.**

**398- பயனாளிகளுக்கு ரூ. 2- கோடியே 76- லட்சத்து 17- ஆயிரத்து 778 -மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப .அவர்கள் வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 73 -வது சுதந்திர தின விழா இன்று (15.08.2019 ) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல் துறை, தீயணைப்புத்துறை, ஊர்காவல் துறை, நாட்டு நலப் பணிதிட்டம், தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.கா.ப. முன்னிலை வகித்தார். தொடர்ந்து மூவர்ண பலுன்கள் மற்றும் சமாதான புறாக்களை பறக்க விட்டார்.

தொடர்ந்து 37- சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

பின்னர் முன்னாள் படை வீரர் நலத் துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ. 50 ஆயிரம் மதிப்பில் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பாக 257 பயனாளிகளுக்கு ரூ. 62 லட்சத்து 68 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், தோட்டக்கலைத் துறை சார்பில் 9 - பயனாளிகளுக்கு ரூ. 10 லட்சத்து 31 ஆயிரத்து 322- மதிப்பில் நலத்திட்டங்களும், தாட்கோ சார்பில் 5 - பயனாளிக்கு ரூ. 1 லட்சத்து 49 ஆயிரம் மதிப்பில் வாகனங்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 2- பயனாளிகளுக்கு தொழில் முனைவோருக்கான கடனுதவியாக ரூ. 33 லட்சத்து 85 ஆயிரத்து 585 மதிப்பிலும், மகளிர் திட்டம் சார்பாக 30 - பயனாளிகளுக்கு ரூ.3 லட்சத்து 28- ஆயிரம் மதிப்பில் அம்மா இரு சக்கர வாகனம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பாக 32 பயனாளிகளுக்கு ரூ. 1 லட்சத்து 31 ஆயிரத்து 676 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் சலவை பெட்டிகளும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை சார்பாக 10- பயனாளிகளுக்கு ரூ. 20 லட்சம் மதிப்பில் மலர் உற்பத்தி தொழில் துவங்க கடனுதவிகள் , குழந்தைகள் நல பாதுகாப்புத் துறை சார்பாக 41 பயனாளிகளுக்கு ரூ.33 லட்சத்து 99 ஆயிரத்து 617 மதிப்பில் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகள், மாவட்ட தொழில் மையம் சார்பாக 5 தொழில் முனைவோருக்கு ரூ. 1 கோடியே 6 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பில் கடனுதவிகள் என மொத்தம் 398 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 76 லட்சத்து 17 ஆயிரத்து

778 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் இன்று ( 15.08.2019 ) வழங்கினார்.

தொடர்ந்து அரசு பணியில் சிறப்பாக பணியாற்றிய காவல் துறை, மருத்துவ துறையை, வருவாய்த்துறை, கால்நடைபராமரிப்புத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, நகராட்சித்துறை, அவரசஊர்தி துறை, மாவட்ட விளையாட்டுத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, தாட்கோ, வனத்துறை, மாவட்ட வேலைவாய்ப்புத்துறை, உணவு பாதுகாப்பு, ஊர்தி ஒட்டுநர்கள் போக்குவரத்துறை, அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டிணம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி, டி.கே.சாமி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, டான்பாஸ்கோ மெட்ரிக் பள்ளி, கேம்பிட்ஜ் மெட்ரிக் பள்ளி, பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, டிரினிடி மெட்ரிக் பள்ளி உள்ளிட்ட 9 - பள்ளிகளை சேர்ந்த 1430 மாணவ மாணவியர்கள் கலை பங்கேற்றனர். கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பள்ளிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நினைவு பரிசு வழங்கி பராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் திரு.தீபக் பில்கி இ.வ.ப., பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.செங்குட்டுவன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.சாந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.ஜி.கே.லோகேஷ்வரி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகேஷ்வரி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. வி.தெய்வநாயகி, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு.ராமமூர்த்தி , துணை இயக்குநர் ( சுகாதர பணிகள்) மரு.பிரியாராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.மகேஷ்வரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.சேகர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சு.மோகன், மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம். கிருஷ்ணகிரி.